வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06 22.09.2025 திங்கட்கிழமை இதழ் : 265 பக்கங்கள் : 08




# அரசியல் தீர்வு விடயத்தில்கூட தமிழ் கட்சிகளிடம் ஒருமித்த கருத்து இல்லை

## இந்திய தூதுவர் கடும் அதிருப்தி



கொழும்பு, செப்ரெம்பர் 22

**இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு இன்னமும் வராமல் இருப்பது குறித்து இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா கடும் அதிருப்தியும் விசனமும் வெளியிட்டுள்ளார்.**

கொழும்பு தமிழ் பத்திரிகைகளின் ஆசிரியர்களை அழைத்து சமகால நிலவரம் தொடர்பில் தூதுவர் கடந்த வாரம் கலந்துரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தான் உயர் ஸ்தானிகராக பதவியேற்ற உடனேயே தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களை அழைத்து பேசினார் என்றும் அப்போது அவர்களிடம் ஐக்கியப்பட்டு செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியதுடன் அரசியல் தீர்வு தொடர்பில் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார் என்றும் தெரிவித்தார்.

எனினும், இந்த சந்திப்பு நடந்து இரு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்த யோசனை ஒன்றை இதுவரை தம்மிடம் முன்வைக்கவில்லை என்று பத்திரிகை ஆசிரியர்களிடம் தூதுவர் கூறினார்.

இந்தியாவை பொறுத்தவரை, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாண சபைகள் தேர்தலை நடத்தி

07



# வல்லிபுர ஆழ்வாருக்கு நேற்று கொடியேற்றம்!

- சி.தில்லைநாதன், த.பிரதீபன் -

வடமராட்சி, செப். 22

பக்தர்கள் கோவிந்தா கோஷம் முழங்க வரலாற்று சிறப்பு பெற்ற துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் கொடியேற்றம் நேற்று காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

ஆலயத்தின் பிரதமகுரு கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையிலான குருமார் நேற்றைய தினம்

07

# இந்தியாவை மீறி மாகாண சபைகள் முறையை இல்லாது செய்யமுடியாது

## வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் கூட்டாக தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப். 22

"இந்தியாவைமீறி மாகாண சபைகள் முறைமையை இல்லாது செய்ய முடியாது. தமிழ் மக்க ளின் இருப்பை உறுதி செய்யும் மாகாண சபைகள் முறைமையை நடைமுறைப்படுத்தத் தேர்தலை விரைவாக அரசாங்கம் நடத்த வேண்டும்" - என்று வடக்கு மாகாண சபையில் சகல தமிழ் கட்சிகளையும் பிரதிநிதித்துவம் செய்த முன்னாள்

07



# போர் குற்றம் குறித்த விசாரணைக்கு சர்வதேச உதவியை நாடுகிறது அரசு

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்

ஜெனிவா, செப். 22

போர் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்த தடயவியல் நிபுணர்கள் உட்பட ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனை மூலம் தொழில்நுட்ப உதவியைப் பெற இலங்கை தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் அகழப்படும் மனிதப் புதைகுழிகளில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண உதவுவதும் இத்தகைய ஒத்துழைப்பில் அடங்கும் என்று வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.

மனித புதைகுழிகளை அகழும் செயல்பாட்டுடன் தொடர்புடைய நீதித்துறை அதிகாரிகளின் உத்தரவுகளைப் பொறுத்து இந்த

07

# மணல் கடத்திய டிராக்டர் மோதி பெண் பலி; இளைஞர் படுகாயம்!

- த.பிரதீபன் -

தென்மராட்சி, செப். 22

மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை மணல் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் உழவு இயந்திரம் மோதியதில் குடும்ப பெண் ஒருவர் உயிரிழந்தார். இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவில் கச்சாய் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், கெற்பேலி மேற்கு - மிருசுவிலை சேர்ந்த நந்த குமார் ஜெயலக்ஷ்மி (வயது 46) என்பவரே

07



# இன்றிரவு அமெரிக்கா செல்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, செப். 22

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இன்று திங்கட்கிழமை இரவு அமெரிக்கா பயணமாகிறார்.

அங்கு அவர், ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொள்வார். நாளை மறுநாள் புதன்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு

07

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# பாதிக்கப்பட்டவரின் தந்தை ஜெனிவாவில் நீதி கோரிக்கை

ஜெனிவா, செப். 22

ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களும் நீதி கோரி குரல் எழுப்பப்பட்டுள்ளது.

கொழும்பு ஷங்க்ரி-லா ஹோட்டலில்

07

# போதைக்கு அடிமையான இளைஞர் கைது!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம்,செப்.22

போதைக்கு அடிமையான இளைஞர் ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான 27 வயதான இளைஞர் நீண்ட நாட்களாக ஐஸ் போதைப்பொருளை பயன்படுத்தி வந்துள்ளார். அவரை கைது செய்தபோது 36 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் அதனை நுகர்வதற்கான உபகரணங்கள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஊரெழுவை சேர்ந்த

07

# மின்சார கட்டணம் 6.8 சதவீதம் உயரும்?

கொழும்பு, செப். 22

எதிர்வரும் ஒக்ரோபர் - டிசெம்பர் மாதத்துக்குள் மின்சார கட்டணம் 6.8 சதவீதத்தால் உயர்வடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சார சபை தற்போது நட்டத்தில் இயங்குகிறது என்று தெரிவித்து மின் கட்டண உயர்வுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

நடப்பு காலாண்டில் 783 கோடி ரூபாய்

07

# அநுர குமாரவின் ஆட்சியிலும் அடக்குமுறை தொடர்கின்றது

## 'சிவிக்கஸ்' அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, செப். 22

ஜனாதிபதி அநுர குமாரவின் ஆட்சியிலும் மக்கள் அடக்குமுறைகளுக்கு உள்ளாகின்றனர் என்று உலகம் முழுவதும் குடிமக்கள் நடவடிக்கைகளையும் சிவில் சமூகத்தையும் பலப்படுத்தும் நோக்கில் செயல்படும் சிவில் சமூக கூட்டமைப்பின் (சிவிக்கஸ்) புதிய அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பண்டத்தரிப்பு - வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் 125ஆவது ஆண்டுவிழா நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டவேளை....

# யாழ்ப்பாணத்தை மீளவும் கட்டியெழுப்ப நடவடிக்கை

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணத்தை மீள கட்டியெழுப்பவும் சுற்றுலா பயணிகளை மேலும் ஈர்ப்பதற்கும் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவில் படகு சவாரி திட்டம் ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர்,

யாழ். மாவட்டத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். இதன் ஓர் அங்கமாக சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதும் எமது இலக்காகும். இதற்காக அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன், தனியார் துறையினரும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில் யாழ். படகு சவாரி திட்டம் மண்டைதீவு பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான திட்டங்கள் எமது யாழ். மண்ணுக்கு சுற்றுலா பயணிகளை மேலும் உள்ளீர்ப்பதற்கு உதவும் என நம்புகின்றேன்- என்றார். (ஐ)

## அனுமதியின்றி மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற லொறி சாரதி கைது

தென்மராட்சி, செப். 22

அனுமதிப்பத்திரம் இன்றி சிறிய ரக லொறி ஒன்றில் மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொடிகாமத்திலிருந்து வந்த லொறியை கைதடி பகுதியில் நேற்று முன்தினம் வீதி சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மறித்து சோதனையிட்டனர்.

இதன்போது, அனுமதிப் பத்திரிமின்றி மரக்குற்றிகளை ஏற்றிச் சென்றமை தெரிய வந்தது. இதையடுத்து, லொறியின்



சாரதியை பொலிஸார் கைது செய்ததுடன், லொறியையும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)



## தியாகதீபம் திலீபனுக்கு ரஜீவன் எம்.பி. அஞ்சலி!

யாழ்ப்பாணம், செப். 22

நல்லூரில் அமைக்கப்பட்ட தியாகதீபம் திலீபன் ஆவண காப்பகத்தில் தேசிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன் அஞ்சலி செலுத்தினார்.

இந்த ஆவண காப்பகம் நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டது. இதன்போது, அங்கு சென்ற ரஜீவன் எம். பி. ஆவண காப்பகத்தை பார்வையிட்டதுடன் திலீபினின் திருவுருவ சிலைக்கு அஞ்சலி செலுத்தினார். (ஐ-05)

## யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் ஆவணவாக்கல் காட்சிப்படுத்தல்



யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில், சிறுவர் பகுதியில் புத்தக கண்காட்சியும் ஆவணவாக்கல் பகுதியில் பழங் கால காட்சிப்படுத்தலும் நடைபெற்றது.

உள்ளூராட்சி வாரம், மற்றும் தேசிய வாசிப்பு மாத செயல் திட்டங்களின் தொடர்ச்சியாகநேற்று முன்தினம் இந்தக் காட்சிப்படுத்தல் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சிகளை பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பார்வையிட்டனர். (ஐ)

## உடையார்கட்டு விபத்தில் இளம்குடும்பஸ்தர் மரணம்

முல்லைத்தீவு, செப். 22

இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிய விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - உடையார்கட்டு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு - பரந்தன் பிரதனா வீதியில் வெள்ளப் பள்ளம் சந்திக்கு அண்மையாக பிரதான வீதியில் ஏற முயன்ற மோட்டார் சைக்கிளும் பிரதான வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உடையார்கட்டு - குரவில் பகுதியை சேர்ந்த 26 வயதான இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சமாதான தினத்தையொட்டி கிளிநொச்சியில் நடைபவனி!




கிளிநொச்சி, செப். 22

உலக சமாதான தினத்தையொட்டிய நடைபவனி நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர்களின் பங்களிப்பில் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியிலிருந்து பேருந்து நிலையம் வரை இந்த நடைவனி நடைபெற்றது.

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் அனுசரணையில் வடக்கை சேர்ந்த 30 இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு சமாதானம் தொடர்பிலான பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. இவர்களின் பயிற்சியின் முடிவிலேயே இந்த நடைவனி நடைபெற்றது.

இந்த நடைபவனியில் மதகுருமார், இளைஞர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-02)



## யாழ். போதனா மருத்துவமனையில் பேரிடர் மேலாண்மை பயிற்சி

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பேரிடர் மேலாண்மை பயிற்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாட்டில் விபத்துகள், அனர்த்தங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் திடீரென பலர் அதில் சிக்கிக் கொண்டால் அவர்களை மருத்துவமனைக்குகக் கொண்டு சென்று சிகிச்சை வழங்குவதற்கான ஆயத்தம் - பயிற்சிகள் இதன்போது வழங்கப்பட்டது.


இதன், இறுதியில் கலந்துரையாடல் நடைபெற்று எதிர்வரும் காலங்களில் பேரிடர் ஒன்று ஏற்படுகின்ற போது எவ்வாறான முன் ஆயத்தங்கள் செய்ய வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டது. (ஐ)

## கடல்பசுவின் சடலம் மன்னாரில் ஒதுங்கியது

மன்னார், செப். 22

உயிரிழந்த நிலையில் கடல் பசு மன்னார் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளது.

மன்னாரின் தெற்கு பகுதியான திருப்புல்லாணி பகுதியிலேயே நேற்று முன்தினம் இந்த கடல் பசு கரை ஒதுங் கியது.



சுமார் 08 வயதுடைய இந்த கடல் பசு சுமார் 300 கிலோ எடை கொண்டது.

படகுடன் மோதுண்டு இது உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
22.09.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 06
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் நாடு எவ்வாறு குரல் கொடுக்க வேண்டும்?

தமிழ்நாட்டு அரசியலில் புதிய முகமாகவும் சிலரால் நம்பிக்கையுடனும் நோக்கப்படும் நடிகர் விஜய், தலைவனை இழந்த தவிக்கும் ஈழத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறார். அவர் ஈழத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க முன்வருவதை நாம் வரவேற்கலாம். ஆனால், தமிழ்நாட்டின் அரசியல் தலைவர் ஒருவர் ஈழத் தமிழ் மக்களுக்காக எவ்வாறு குரல் கொடுக்க வேண்டும் - எவ்வாறு குரல் கொடுத்தால் அது தமிழ் மக்களுக்கு நன்மையானது என்பதையும் விஜய் அறிந்துகொள்ள வேண்டும். ஒருவேளை அவர் அறிந்திருக்காமலும் இருக்கலாம் என்னும் அடிப்படையில் சில விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஈழத் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கை மிதவாத அரசியலால் வழிநடத்தப்பட்ட காலத்திலிருந்து பின்னர் - ஆயுதப் போராட்டமாக பரிணமித்த காலம் வரையில் தமிழ்நாடு ஒரு தொப்புள் கொடி உறவாகவே நோக்கப்பட்டது. ராஜீவ் காந்தி கொலை தமிழ்நாட்டில் இடம்பெறும் வரையில் ஈழத் தமிழர் அரசியலும் தமிழ்நாட்டு அரசியலும் பிரிக்க முடியாதளவுக்கு இணையான ஒன்றாகவே பயணித்திருக்கின்றன.

ஈழத் தமிழ் ஆயுத அமைப்புகளை ஆதரித்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் மு. கருணாநிதி ஒருமுறை ஆட்சியையும் இழந்து போயிருக்கிறார். அந்தளவுக்கு தமிழ்நாட்டு அரசியலுடன் ஈழத் தமிழர் உரிமைக் கோரிக்கை இரண்டறக் கலந்திருந்தது. ஆனால், தற்போது அவ்வாறான நிலைமை இல்லை. உதிரிகளாக சிலர் விடயங்களை பேசிக்கொண்டாலும்கூட, பிரதான அரசியல் நீரோட்டத்தில் ஈழத் தமிழர் விவகாரம் ஒரு பிரதான பேசுபொருளாக இல்லை.

இதற்கு இலங்கையில் ஈழத் தமிழர் அரசியல் பலவீனமான நிலையிலிருப்பதும் குறிப்பாக, ஈழத் தமிழ் சமூகத்திற்கென்று ஒரு வலுவான அரசியல் தலைமை இல்லாமல் இருப்பதும் ஒரு முக்கிய காரணமாகும். ஒரு காலத்தில் செல்வநாயகம் பின்னர் அமிர்தலிங்கம் - அதற்கு பின்னர், ஆயுத விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் தமிழ்நாட்டு தலைவர்களோடு நெருக்கமான தொடர்பிலும் - உறவிலும் இருந்தனர். விடயங்களை அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தனர். இப்போது அதற்கான தகுதி நிலையோடு எவரும் இல்லை. இந்த நிலையில், ஈழத் தமிழ் மக்களுக்காக, இந்திய அளவில் குரல் கொடுக்கும் பணியை விஜய் செய்வாராக இருந்தால் அது மீண்டும் ஈழத் தமிழர் பிரச்னையை இந்திய அளவில் ஒலிப்பதற்கான அடித்தளமாக அமையும்.

ஆனால், எவ்வாறு குரல் கொடுப்பது?

இன்றைய சூழலில், இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கான இந்தியாவின் ஆற்றல் மிகவும் மட்டுப்பட்ட நிலையில் இருக்கிறது. அன்றிருந்த நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம். இந்த நிலையில்தான் இந்தியா, இலங்கையின் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதனைத்தான் இந்தியா வலியுறுத்தவும் முடியும்.

இந்தநிலையில் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் ஈழத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க விரும்பினால் அவர்கள் கையிலெடுக்க வேண்டிய விடயம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒன்றுதான். அதாவது, ஈழத் தமிழ் மக்கள் சார்பாக கையெழுத்திட்ட நாடு என்னும் வகையில் அதனை அமுல்படுத்துமாறு புதுடில்லி தலையீடு செய்யவேண்டும் என்னும் கோரிக்கை தமிழ்நாட்டிலிருந்து வலுவாக மேலெழுவது அவசியமாகும். விஜய் இதனைச் செய்வாராக இருந்தால் அதுதான், இன்றைய நிலையில், ஈழத் தமிழ் மக்களுக்கான குரலாகும். அவ்வாறில்லாது நடக்க முடியாத விடயங்களைக் கூறினால் தமிழ் நாட்டின் ஏனைய அரசியல்வாதிகள் போன்று பத்தோடு பதினொன்றாகவே விஜயும் இருப்பார்.

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும்

கொழும்பு, செப். 22

வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யும் எனவும் குறித்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதேசங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் மத்திய, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக அதிகரித்து வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்று வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(எ)

# ஹிட்லரின் மறுபிறவியா ஜனாதிபதி அநுரகுமார?

## உதய கம்மன்பில கேள்வி



கொழும்பு, செப். 22

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஜேர்மனியின் அடோல்ப் ஹிட்லரின் மறுபிறவியா என்பதில் சந்தேகம் இருப்பதாக பிவித்துரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது ஆண்டு விழாவில் பேசிய போதே அவர் இந்த சந்தேகத்தை வெளியிட்டார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்-

எங்கள் தாயகத்தின் துரதிர்ஷ்டவசமான பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சி தனது 79வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

இந்த பாசிஸ்டுகள் ஆயுதங்களுடன் அரச அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்ற போது, நாங்கள் அதை எதிர்கொண்டோம்.

ஆயுதம் ஏந்திய பாசிஸ்டுகளை அடக்குவதற்கு போர் வீரர்களுக்கு சட்ட பூர்வமான உரிமை இருந்தது.

தேசபக்தி உடைகளை அணிந்து சோசலிச முகமூடிகளை அணிந்து நாங்கள் ஆட்சியைப் பிடித்தபோது அது எங்களுக்கு ஒரு விசித்திரமான அனுபவமாக இருந்தது.

அடோல்ப் ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்ததற்கும் அனுர திசாநாயக்க அதிகாரத்திற்கு வந்ததற்கும் இடையே ஒரு குறிப்பிடத்தக்க ஒற்றுமை உள்ளது.

இந்த நாட்டிற்கு என்ன நடக்கும் என்பது நிச்சயமற்ற ஒரு தருணம். ஜனாதிபதி தொழிற்சங்கத் தலைவர்களை அச்சுறுத்தும் போது, ஹிட்லரின் ஜேர்மனியை நாம் நினைவுபடுத்துகிறோம்.

அவர் அடோல்ப் ஹிட்லரின் மறுபிறவி என்ற நியாயமான சந்தேகத்தை எழுப்பும் வகையில் அநுரகுமார திஸநாயக்க செயல்படுகிறார் - என்றார். (அ)

# 38 துப்பாக்கிதாரிகள் பொலிஸாரால் கைது!

கொழும்பு, செப். 22

இந்த ஆண்டு இதுவரை 38 துப்பாக்கிதாரிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல்வேறு சோதனை நடவடிக்கைகளின் போது 1,721 துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும், அதில் 61 ரி-56 ரக துப்பாக்கிகள் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் 62 கைத்துப்பாக்கிகள் மற்றும் 40 ரிவோல்வர்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்** – புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. கனவு நனவாகும் நாள்.

**இடபம்** – பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பணம் வந்து சமாளிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்** – கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கடகம்** – கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். எதிர்பார்த்த நல்ல செய்தி வரும்.

**சிம்மம்** – ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். மன இறுக்கங்கள் உண்டாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள்.

**கன்னி** – எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**துலாம்** – கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**விருச்சிகம்** – உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**தனுசு** – கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கி குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும்.

**மகரம்** – சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கும்பம்** – சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடிவடையும்.

**மீனம்** – எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும்.

# புழுதியாறு குளத்தில் ஏற்று நீர்ப்பாசன திட்டம்: பணிகளைப் பார்வையிட்டார் சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி, செப். 22

வட்டக்கச்சி மாயவனூரில் உள்ள புழுதியாறு குளத்தில் நடைபெறும் ஏற்று நீர்ப்பாசனத் திட்டப் பணிகளை நேற்று முன்தினம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சென்று பார்வையிட்டார்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமரர் சு. பசுபதிப்பிள்ளையின் பெரும் முயற்சியால் இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் உருவாக்கப்பட்டது. பிறகு அதற்கான மின்சார இணைப்புகளில் ஏற்பட்ட இடர்பாடு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த பணி, மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் சுமார் 12 மில்லியன் ரூபாய் செலவில் சூரிய மின்கலம் மூலம் இயங்கும் நீர் பம்பிகள் ஊடாக விவசாயிகளுக்கான நீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது, கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடாக இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனையே பாராளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டுள்ளார்.

சிறீதரன் எம். பியுடன் கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் பிரகாஷ் கைலாயபிள்ளை, கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் பொன் காந்தன், மாயனூர் கமக்கார அமைப்பின் தலைவர் ஜெகன் மற்றும் கமக்கார அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் சென்று குறித்த பணிகளை பார்வையிட்டிருந்தனர். (எ-05)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ விபத்தில் சிக்கியது

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை பகுதியில் ஓட்டோ ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயங்களுக்குள்ளான ஓட்டோ சாரதி யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-03)



# மண்டைதீவில் துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதான நிர்மாண ஆரம்ப கட்டப் பணிகள் தற்போது நடக்கின்றன. இதன்போது, நேற்று முன்தினம் ரி -56 ரக துப்பாக்கி ரவைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. இந்தத் துப்பாக்கி ரவைகளை மீட்பதற்கான சட்ட நடவடிக்கையை அவர்கள் எடுத்துள்ளனர். (எ-05)

# சாரணர்களால் தூய்மையானது வவுனியா நகரம்

வவுனியா, செப். 22

மறுமலர்ச்சி நகரம் என்ற செயல்திட்டத்துக்கமைவாக வவுனியா மாவட்ட சாரணர் சங்கமும் மாநகர சபையும் இணைந்து வவுனியா நகர வீதிகளைத் தூய்மைப்படுத்தும் பணியில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

இதன்போது, நகரத்தின் பிரதான வீதிக்கரைகளில் இருந்த பெருமளவான பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள் அகற்றப்பட்டிருந்தன.

அதனைத்தொடர்ந்து பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையின் தீமைகள் தொடர்பில் சாரண மாணவர்களுக்கு தெளிவூட்டும் விழிப்புணர்வு நிகழ்வு நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுற்றுச்சூழல்



அதிகார சபையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் தவகிருபா கலந்து கொண்டு, மாணவர்களுக்கு கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

இதில் வவுனியா மாநகர சபை முதல்வர் சு. காண்டீபன், மாநகர சபை ஆணையாளர் பி. வாகீசன், சாரணர் சங்க உதவி மாவட்ட ஆணையாளர் எஸ். சந்திரமோகன் மற்றும் மாநகர சபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ-10)

# பெண்ணின் மரணத்துக்கு காரணமான வாகனம் பொலிஸாரிடம் மாட்டியது

## விசுவமடுவில் இருவர் கைது

வவுனியா, செப். 22

கனகராயன்குளம் பகுதியில் பெண் ஒருவரை மோதி விட்டு தப்பிச்சென்ற வாகனம் வவுனியா மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், கனகராயன்குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பப்பெண் ஒருவர் கடந்த 16ஆம் திகதி இரவு கணவருடன் ஏற்பட்ட முரண்பாட்டை தொடர்ந்து கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றார்.

இதன்போது, ஏ - 9 வீதியில் வைத்து வாகனம் ஒன்று அவரை மோதியதில் படுகாயமடைந்த அவர் உயிரிழந்தார். விபத்தை ஏற்படுத்திய வாகனம் நிறுத்தாமல் அங்கிருந்து தப்பிச்சென்றது.

சம்பவத்தில் அந்த பகுதியைச் சேர்ந்த ம. இதயரஞ்சினி என்ற 32 வயது நான்கு பிள்ளைகளின் தாயே உயிரிழந்தார்.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர். இதனையடுத்து விபத்தை ஏற்படுத்திய வாகனத்தையும் அதன் சாரதி மற்றும் உரிமையாளர் ஆகியோரை விசுவமடு பகுதியில் வைத்து வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

வாகனத்தின் நிறம் உட்பட ஏனைய அமைப்புகளை மாற்றியமைக்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டனர்.

குறித்த கைது நடவடிக்கை வவுனியா மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக்க மற்றும் பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது. (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஆடை நிறுவனங்கள் கொழும்பில் முகாமிடுகின்றன

கொழும்பு, செப். 22

அமெரிக்காவின் வரிச் சலுகைகளைப் பயன்படுத்துவதற்காக இந்திய நிறுவனங்கள் தங்கள் ஆடை உற்பத்திமையங்களை கொழும்புக்கு நகர்த்துகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பெருமளவிலான ஆடை உற்பத்தியாளர்கள் உட்பட சுமார் 20 நிறுவனங்கள் கொழும்பு வந்துள்ளன என்று கூறப்பிடுகிறது.

இந்த நிறுவன்கள் மூன்று மற்றும் ஐந்து ஆண்டுகள் குத்தகை ஒப்பந்தங்களை செய்துள்ளன என்றும் அறிய வருகிறது.

அமெரிக்கா இந்தியாவின் இறக்குமதி பொருட்களுக்கு 50 சதவீத வரியை விதித்துள்ளது. அதேநேரம் இலங்கைக்கு 20 சதவீத வரியை விதித்தது. இதையடுத்தே இந்த செயல்பாட்டு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் போக்கு தொடர்ந்தால், இலங்கையின் ஆடைத் தொழில்துறைக்கு அதிக பணியாளர்கள் ஈர்க்கப்பட வாய்ப்புள்ளது என்றும் கூறப்படுகிறது. (ஐ)

# மாறுவேடத்தில் வரும் குற்றவாளிகள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, செப். 22

குற்றவாளிகள் அல்லது தீவிரவாத சக்திகள் படையினரின் சீருடையில் மாறுவேடமிட்டு சட்டவிரோத செயல்களை செய்ய முயற்சிப்பதைத் தடுக்கும் வகையில் பொலிஸாருக்கு அறிவுறுத்தல்களை பொலிஸ் மா அதிபர் வழங்கியுள்ளார்.

குறிப்பாக முக்கியஸ்தர்களின் நிகழ்வுகளுக்கு நியமிக்கப்பட்ட பணியாளர்களைத் துல்லியமாக அடையாளம் காண நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த வாரம் மூத்த அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட உள்ளக சுற்றறிக்கையில் இந்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன என்று அறிய வருகிறது.

சட்டத்தரணியாக மாறுவேடமிட்ட துப்பாக்கிதாரி நீதிமன்ற அறையில் ஒருவர் கொல்லப்பட்டமை போன்ற சம்பவம் மீள நிகழாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# புறக்கோட்டை தீ விபத்து விசாரிக்க குழு நியமனம்

கொழும்பு, செப். 22

புறக்கோட்டை, முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள மின்சார உபகரண விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீப்பரவல் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.


இந்தக் குழுவுக்கு பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர், சட்டத்தரணி சுனில் வட்டகல தலைமை தாங்குகிறார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் ஏற்பட்ட இந்த தீப்பரவல் பல மணி நேர முயற்சியின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர், விமானப் படை, கடற்படையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தீயை அணைக்கவும், அருகிலுள்ள கட்டடங்களுக்கு தீ பரவாமல் தடுக்கவும் சுமார் 15 தீயணைப்பு வாகனங்களும் விமானப் படையின் பெல்-212 உலங்கு வானூர்தியும் இந்த நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்டன.

இந்த சம்பவத்தில் எந்தவித உயிர் சேதமும் ஏற்படவில்லை என்பதுடன் பொருள் சேதங்கள் மதிப்பிடப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# இந்திய கடற்படை கப்பல் கொழும்பை வந்தடைந்தது



கொழும்பு, செப். 22

இந்திய கடற்படை கப்பலான ஐ.என்.எஸ் சற்புத்ரா நேற்று முன்தினம் விநியோகம் மற்றும் சேவைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த கப்பலை கடற்படை மரபுகளின்படி இலங்கை கடற்படையினர் கொழும்பு துறைமுகத்தில் வரவேற்றனர்.

சற்புத்திரா கப்பல் 142.5 மீற்றர் நீளம் கொண்டதுடன், அங்கு 403 பேர் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 714 நபர்கள் கைதாகினர்!

கொழும்பு, செப். 22

நாடு முழுவதும் பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின்போது மொத்தமாக 714 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தவை வருமாறு, நேற்றுமுன்தினம் காலை வரை பல்வேறு குற்றச் செயல்களுடன்நேரடி தொடர்பு கொண்ட 19 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 253 பேரும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 185 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேநேரம், மதுபோதையில் வாகனம் செலுத்திய 38 பேரும் முறையற்ற விதத்தில் வாகனம் செலுத்திய குற்றச்சாட் டில் 23 பேரும் கைதுசெய்யப் பட்டனர்.

இதனிடையே, வேறு வகையான போக்குவரத்து குற்றங்களில் ஈடுபட்ட 4 ஆயிரத்து 495 பேர் அடையாளம் காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட் டது.

# சொத்து - பொறுப்பு விவரங்களை 41 முக்கியஸ்தர்கள் வழங்கவில்லை

கொழும்பு, செப். 22

கடந்த ஆண்டுக்கான சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிக்க தவறிய 41 பேரில் முன்னாள் அமைச்சரவை அமைச்சர், பல ஆளுநர்கள், இராஜாங்க அமைச்சர்கள், தூதர்கள், மூத்த இராஜதந்திர ஊழியர்கள் மற்றும் நீதிபதிகள் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொத்துகள் மற்றும் பொறுப்புகளை அறிவிக்காதவர்களின் திருத்தப்பட்ட பட்டியலின்படி, முன்னாள் அமைச்சர் ஒருவர், 6 முன்னாள் இராஜாங்க அமைச்சர்களும் அடங்குவர்.

அத்துடன், 4 முன்னாள் ஆளுநர்களும் இந்த பொறுப்பிலிருந்து தவறியுள்ளனர் என்று இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# இளைஞர் கொலை!

கொழும்பு, செப். 22

குடும்ப தகராறால் கூரிய ஆயுதத்தால் குத்தி இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

கேகாலை - ஹெம்மாத்தகம பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், தெவனகலையை சேர்ந்த 21 வயது இளைஞரே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் 23 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ரூ. 300 கோடி சொத்துகள் பறிமுதல்

கொழும்பு, செப். 22

2024 ஜனவரி முதல் கடந்த செப்ரெம்பர் வரை நாடு தழுவிய சோதனை நடவடிக்கைகளில் 300 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் கடத்தல், பெரிய அளவிலான மோசடி, நிதி முறைகேடு என்பவை மூலம் ஈட்டப்பட்ட சொத்துகளே இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டன. (ஐ)

# பாராளுமன்ற உணவகத்தில் கடும் சுகாதார பிரச்னைகள்



கொழும்பு, செப். 22

பாராளுமன்ற உணவகத்தில் கடுமையான சுகாதார பிரச்னைகள் காணப்படுகின்றன என்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடம் 40 ஆண்டுகளுக்கு முன்பு திறக்கப்பட்டதிலிருந்து, வளாகத்துக்கள் உணவு தயாரிப்பை சரிபார்க்க எந்த பொது சுகாதார பரிசோதகர்களோ அல்லது சுகாதார அதிகாரிகளோ அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

"கடந்த ஏப்ரல் மாதம் பாராளுமன்ற வளாகத்திற்குள் உணவு பாதுகாப்பு நிலைமையை ஆய்வுசெய்யுமாறு பத்தரமுல்லை சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொது சுகாதார அதிகாரிகளை நான் கேட்டுக் கொண்டேன், அவர்கள் எனக்கு ஓர் அறிக்கையை வழங்கினர்," என்று அவர் கூறினார்.

இந்த ஆய்வில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவு சேர்க்கைகள், எலிகள், கரப்பான் பூச்சிகளின் எச்சங்கள், உடைந்த தரை மற்றும் சேதமடைந்த சமையல் பாத்திரங்கள் கண்டறியப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. "இந்த அறிக்கை இன்னும் ஊடகங்களுக்கு வெளியிடப்படவில்லை, ஆனால் அது எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படும் என்று நம்புகிறேன்" என்று அவர் கூறினார். (ஐ)

# கடன் அட்டை பாவனை உயர்வு

கொழும்பு, செப். 22

நாட்டில் கடன் அட்டை பாவனை இந்த ஆண்டில் 3.8 சதவீதம் அதிகரித்துள்ளது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த ஜூலையில் 12 ஆயிரத்து 325 புதிய கடன் அட்டைகள் பாவனைக்கு வந்துள்ளன. ஜூன் இறுதியில் 20 இலட்சத்து 75 ஆயிரத்து 744 கடன் அட்டைகள் பாவனையில் இருந்தன.

இந்த எண்ணிக்கை ஜூலை இறுதிக்குள் 20 இலட்சத்து 88 ஆயிரத்து 69 ஆக பதிவாகியுள்ளது. இது ஜூலை மாதத்தில் 0.59 சதவீத அதிகரிப்பை காட்டுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பழிவாங்கலுக்கே அநுர அரசு முன்னுரிமை வழங்குகின்றது

## சந்திரிகா குமாரதுங்க சாடல்



கொழும்பு, செப். 22

நல்லாட்சியை முன்னெடுப்பதை விடவும் பழிவாங்கும் செயல்பாடுகளுக்கு ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான அரசாங்கம் முன்னுரிமை வழங்கி வருகிறது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விசனம் வெளியிட்டுள்ளார்.

மேலும், 1994 முதல் 2005 வரை ஆட்சி செய்த எனக்கு டொரின்டனில் அரச இல்லம் வழங்கப்பட்டது. இந்த வீட்டை ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் எனது சொந்த நிதியிலேயே திருத்தியமைத்தேன்.

நான் விழுந்தமையால் இடுப்பு பகுதியில் முறிவு ஏற்பட்டுள்ளது. இதற்கான சிகிச்சையை பெற்றுவருகிறேன். தினமும் உடற்பயிற்சிகளை செய்ய வேண்டியுள்ளது. ஆகவே, இந்த இல்லத்தில் ஆயுள்காலம் வரையில் தங்கியிருப்பதற்கான அனுமதியைக்கோரி ஜனாதிபதி அநுர குமாரவின் அரசாங்கத்துக்கு கடிதம் அனுப்பினேன். ஆனால், அதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

தற்போது, கொழும்பில் எனக்கு வீடு இல்லை. கொழும்பில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுக்கும் முயற்சிகளை ஜே. வி. பியினர் தடுத்துள்ளனர். தற்போது சிறிய வீடு ஒன்றை எடுத்துள்ளேன். அதை திருத்தும் வரை அரச இல்லத்தில் தங்கியிருக்க அனுமதி கோரியுள்ளேன்என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்துகளை அலங்கரிக்க முடியும் ஆசனப்பட்டி பொருத்த முடியாதா?

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க கேள்வி

காரைதீவு, செப். 22

பேருந்துகளை அலங்கரிக்க முடியும் என்றால் ஏன் ஆசனப பட்டி பொருத்த முடியாது?- என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் அம்பாறையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அனுமதிப்பத்திரத்துக்கான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இதன்படி, பொது போக்குவரத்து சாரதிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் அனுமதிப்பத்திரத்தைப் பெற வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சில பேருந்துகள் தயாரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட போதே ஆசனப்பட்டி இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால் பேருந் துகளை அலங்கரிக்க முடியும் என்றால் ஏன் ஆசனப்பட்டி பொருத்த முடியாது? இப் போது சில சாரதிகள் என்னையும் பொலிஸாரையும் ஏமாற்ற தங்கள் பிள்ளைகளது பாடசாலை பைகளின் பெல்ட்களை அணிந்து வருகின்றனர். இவ்வாறானவர்களிடம் 50 பயணிகளை ஒப்படைப்பது பொருத்தமானதல்ல. எனவே, நாம் ஒரு முடிவை எடுத்துள்ளோம்.

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் ஒவ்வொரு சாரதியும் பொதுப் போக்குவரத்து அனுமதிப்பத் திரத்தைப் பெறுவது கட்டாய மாகும். நாங்கள் இதற்கான திட் டங்களை வகுத்துள்ளோம், டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் அவர்கள் நிச்சயமாக அந்த அனு மதிப் பத்திரத்தை பெறவேண் டும்"- என்றார். (எ)

# உயிருக்குப் போராடிய சிறுத்தை மீட்கப்பட்டது



நுவரெலியா, செப். 22

அக்கரபத்தனை, ஆக்ரா கற்பாறை பள்ளத்தில் நீர் தேங்கியிருந்த பகுதியில் விழுந்து உயிருக்குப் போராடிய சிறுத்தையொன்று, நுவரெலியா வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் பாதுகாப்பாக மீட்கப்பட்டது.

சிறுத்தையை கண்ட பொது மக்கள் அது பற்றி அக்கரபத்தனை பொலிஸாருக்கு தெரியப்படுத்தி, அவர்கள் மூலம் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த அதிகாரிகள் கற்பாறை நீர் தேக்கத்தில் சிக்கி உயிருக்குப் போராடிய சிறுத்தையை, மூன்று மணிநேர போராட்டத்துக்கு பின்னர் மீட்டனர். (எ)

# கசிப்பு உற்பத்தி நிலையம் வீரமுனையில் முற்றுகை!

சம்மாந்துறை, செப். 22

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரமுனை 03 பகுதியில் சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று முன்தினம் சனிக்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரால் முற்றுகையிடப்பட்டது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

வீரமுனை 03 பகுதியைச் சேர்ந்த 25 வயது சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 60 லீற்றர் கோடா, 4 லீற்றர் கசிப்பு, ஹாஸ் சிலிண்டர் 2, ஒரு தொகை றப்பர் மற்றும் செப்பு குழாய் என்பன மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கைது நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் ஆலோசனைக்கு அமைய, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.என்.பிரதிப்குமார தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-01)

# ஹற்றன் நோக்கி சென்ற ஓட்டோ வீதியில் தீப்பிடித்து

ஹற்றன், செப். 22

நாவலப்பிட்டியிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 06.00 மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்தது.

ஓட்டோவில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறை சரிபார்க்க, அதனை சாரதி செலுத்திச் சென்ற நிலையிலேயே இவ்வாறு தீப் பிடித்து எரிந்தது.

ஓட்டோ திடீரென தீப்பற்றி எரிவதை அவதானித்த பிரதேசவாசிகள்,

பொலிஸார் ஒன்றிணைந்து நீர் ஊற்றி அணைக்க முயன்ற போதும் ஓட்டோவின் முழுப் பகுதியி லும் தீ பரவி முற்றிலும் சேதமடைந்துள்ளது.

தீ விபத்து ஏற்பட்ட ஓட்டோவில் இருவர் பயணித்ததாகவும் ஆனால்,

எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கினிகத்தேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 78 மீனவர்கள் கடற்படையால் கைது

திருகோணமலை, செப். 22

திருகோணமலையைச் சுற்றியுள்ள கடலோர பகுதிகளிலும் காரைதீவு முதல் நிந்தவூர் வரையிலான கடல் பகுதியிலும் நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின் போது, சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 78 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களில் கடற்படையினர் உள்நாட்டு கடற்பகுதியில் நடத்திய சோதனையின் போதே, இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

மீனவர்களுடன், 35 டிங்கி படகுகளையும் பல நாள் மீன்பிடிப் படகு ஒன்றையும் கடற்படையினர் பறிமுதல் செய்தனர்.

சட்டவிரோத மீன்பிடி உபகரணங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள், வெடிபொருட்கள் உள்ளிட்ட முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் திருகோணமலையைச் சுற்றியுள்ள கடலோர பகுதிகளிலும் காரைதீவு முதல் நிந்தவூர் வரையிலான கடல் பகுதியிலும் நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின் போது கைதாகியுள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது.

சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்றொழில், நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# கல்முனை மாநகர சபைக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும்

## நிஸாம் காரியப்பர் வலியுறுத்தல்

கொழும்பு, செப். 22

கல்முனை மாநகர சபைக்கான தேர்தலை ஒத்திவைப்பது அந்த பிரதேச மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகும். எனவே, கல்முனை மாநகர சபைக்கான தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

சாய்ந்தமருது நகர சபை தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் முன் வைக்கப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஜனக் டி.டி.சில்வா, பிரியந்த பெர்னாண்டோ, சம்பத் அபேகோன் முன்னிலையில் இந்த வழக்கு எடுக்கப்பட்டது.

வழக்கில் எதிர் மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் நீதிமன்றத்தில் தனது வாதங்களை முன் வைக்கும் போது,

கல்முனை மாநகர சபைக்கான தேர்தலை ஒத்திவைப்பது அந்த பிரதேச மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகும். எனவே, கல்முனை மாநகர சபைக்கான தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்.

சாய்ந்தமருது நகரசபைக்கு தனியாக தேர்தல் நடத்த விரும்பினால் 1987 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த உள்ளூராட்சி மன்ற எல்லைகளைக் கருத்தில் கொண்டு மேலும் 3 உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

இதன் பிரகாரம் கல்முனை பட்டின சபையை மையமாகக் கொண்டு கல்முனை மாநகர சபை, கரைவாகுப்பற்று வடக்கு கிராம சபையை மையமாகக் கொண்டு மருதமுனை பிரதேச சபை.

கரைவாகுப்பற்று மேற்கு கிராம சபையை மையமாகக் கொண்டு மேலும் ஒரு பிரதேச சபையை கல்முனையில் உருவாக்க வேண்டும் என நிஸாம் காரியப்பர் வாதிட்டார்.

வழக்கின் முழு விசாரணைகளும் பூர்த்தியடைந்தது. வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


# அதி சொகுசு பேருந்து - லொறி காத்தான்குடியில் மோதி விபத்து

மட்டக்களப்பு, செப். 22

கொழும்பிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்ற அதி சொகுசு பேருந்து லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காத்தான்குடி பிரதான வீதியில் பேருந்து - லொறி மற்றும் ஓட்டோவுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிப் பயணித்த பேருந்தும் கொழும்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்று லொறியும் மோதி விபத்துக்குள்ளானது. இதனையடுத்து பேருந்தின் பின்னால் சென்று கொண்டிருந்த ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளானது.




லொறியை பிரதான வீதியின் ஓரமாகவுள்ள உணவகம் ஒன்றில் நிறுத்த முற்பட்ட போது பேருந்து வேகக்கட்டுப்பாட்டினை இழந்து லொறியின் பின்னால் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக காத்தான் குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தின்போது ஓட்டோ மற்றும், அதி சொகுசு பேருந்தின் முன் பகுதி பாரிய சேதத்துக்குள்ளானதுடன் லொறியின் பின் பகுதியும் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பேருந்தில் பயணம் செய்த பயணிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத நிலையில் பேருந்தின் சாரதி, நடத்துநர், மற்றும் ஓட்டோ சாரதி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிக்கப்பட்ட...

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட 20 வயதான விஹங்க தேஜந்த என்பவரின் தந்தையான சுராஜ் நிலங்க என்பவரே இவ்வாறு நீதி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தொண்டு நிறுவனங்களின் சார்பில் உரையாற்றிய சுராஜ் நிலங்க, தாக்குதல் நடத்தியவர்களுக்கு அப்பால் 260இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட பேரழிவுகரமான குண்டுவெடிப்புகளுக்குப் பொறுப்பான அனைவருக்கும் எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்தியதுடன், முழுமையான - சுயாதீனமான மற்றும் விரைவான குற்றவியல் விசாரணையையும் அவர் கோரினார்.

ஜனாதிபதியாக அநுர குமார திஸநாயக்க தெரிவாகி ஒரு வருடமாகின்ற போதிலும், பொறுப்புக்கூறலுக்கான நம்பிக்கைகள் மங்கி வருகின்றன. மூளையாக செயல்பட்டவர்கள் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. தொடர்ச்சியான விசாரணைகள் "கடுமையான குறைபாடுகளால்" சிதைக்கப்படுகின்றன - என்றும் அவர் கூறினார்.

இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவரல்லாத சிலரில் பௌத்தரான தனது மகன் விஹங்கவும் அடங்குவார் என்று தெரிவித்த அவர் ஐந்து ஆண்டுகளுக்கு பிறகும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஏற்படுத்திய காயங்கள் ஆறவில்லை. உலக அரங்கில் நீதிக்கான கோரிக்கை வலுபெறுகிறது - என்றும் கூறினார். (ஐ)

## அரசியல்...

அர்த்தபுஷ்டியான அதிகாரப் பரவலாக்கலுக்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து வலியுறுத்துவோம்.

மிகவும் அண்மையில், இந்த நிலைப்பாட்டையே ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இந்திய பிரதிநிதி வலியுறுத்தினார் என்றும் தூதுவர் குறிப்பிட்டார்.

2024 டிசெம்பரில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க புதுடில்லிக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ பயணத்தின் போதும் கடந்த ஏப்ரலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி கொழும்புக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ பயணத்தின்போதும் வெளியிடப்பட்ட இரு நாடுகளினதும் கூட்டறிக்கைகளில் 13ஆவது திருத்தம் பற்றி பிரத்தியேகமாக குறிப்பிடப்படாமல் அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பொதுவில் கூறப்பட்டிருந்தமை குறித்து பத்திரிகை ஆசிரியர்கள் சிலர் சுட்டிக்காட்டியபோது, "அரசமைப்பை நடைமுறைப்படுத்துமாறு இந்தியா கூறும்போது எதை மனதில் கொண்டு கூறுகிறோம் என்பதை இலங்கை அரசாங்கம் புரிந்துகொள்ளும்", என்று சந்தோஷ் ஜா பதிலளித்தார்.

தமிழ்க் கட்சிகளின் போக்குகள் குறித்து கருத்து தெரிவித்தபோது, "அவை தங்களை தாங்களே தலையில் துப்பாக்கியால் சுட்டுக்கொல்வது போன்று நடந்து கொள்கின்றன", என்று தனது கையை தலையில் வைத்து குறிப்பாக அவர் சொன்னார்.

மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்கள் தங்களை மலையகத் தமிழர்கள் என்று அடையாளப்படுத்த விரும்புகிறார்கள் என்றும் அது குறித்து இந்தியாவின் கருத்து என்ன என்று ஒரு பத்திரிகை ஆசிரியர் கேட்டார். அதற்கு பதிலளித்த சந்தோஷ் ஜா தங்களைப் பொறுத்தவரை அந்த மக்கள் இந்திய வம்சாவளியினரே என்றும் அவர்கள் தங்களை எவ்வாறு அழைக்க விரும்புகிறார்கள் என்பதைப் பற்றி இந்தியா அபிப்பிராயம் சொல்வதற்கில்லை எனவும் கூறினார்.

அடுத்த வருடம் அரசாங்கம் மாகாண சபைகள் தேர்தலை நடத்தும் என்ற நம்பிக்கை இருப்பதாக இந்தியத் தூதுவர் வெளியிட்ட கருத்துகள் அறி குறிகாட்டவில்லை. (ஐ)

## இன்றிரவு

(உள்ளூர் நேரம்) உரையாற்றவுள்ளார்.

இந்தப் பயணத்தில் ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மற்றும் பல உலக நாடுகளின் தலைவர்களுடன் இரு தரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார். அத்துடன், அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களுடனான சந்திப்பிலும் ஜனாதிபதி பங்கேற்பார்.

ஜனாதிபதியின் இந்தப் பயணத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும் பங்கேற்கவுள்ளார். (ஐ)

## மணல்...

உயிரிழந்தார். கனகலிங்கம் செந்தூரன் (வயது 22) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

குடும்பப் பெண்ணும் அவரின் உறவினருமான இளைஞரும் மோட்டார் சைக்கிளில் கச்சாய் வீதியூடாக கொடிகாமம் நோக்கி சென்றுகொண்டிருந்தனர். அதே திசையில் பயணித்த மணல் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் உழவு இயந்திரம் மோட்டார் சைக்கிளை மோதியது.

இதில், குடும்பப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த இளைஞர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இதேநேரம், விபத்தை ஏற்படுத்திய உழவு இயந்திரம் தப்பிச் சென்றுள்ளது.

விபத்துக் குறித்த விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அநுரகுமாரவின்...

அந்த அறிக்கையில்,

ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான அரசாங்கம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழிப்பதாகவும், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தின் முரணான விதிகளை திரும்பப் பெறுவதாகவும் ஒரு சுயாதீனமான வழக்குத் தொடுநர் அமைப்பை நிறுவுவதாகவும் உறுதியளித்து. ஆனால், பதவிக்கு வருந்து ஒரு வருடமானபோதும் அடக்குமுறைகள் நீடிக்கின்றன. புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்களும் தொடர்கின்றன.

வட, கிழக்கில் உள்ள தமிழ் செயல்பாட்டாளர்கள் தொடர்ந்து துன்புறுத்தல், கண்காணிப்பு மற்றும் சட்டரீதியான அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

வட, கிழக்கிலுள்ள பெண்கள் உரிமை அமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. கடுமையான அதிகாரத் தடைகள் அவற்றின் அன்றாட வாழ்வியலை அச்சுறுத்துகின்றன. அமைதியான ஒன்றுகூடலுக்கான அரசமைப்பு உத்தரவாதங்கள் இருந்தபோதிலும் பொலிஸார் ஆர்ப்பாட்டங்கள்மீது பலமுறை ஒடுக்குமுறைகளை மேற்கொண்டுள்ளனர்.

2025 மார்ச்சில், கொழும்பில் 27மாணவ செயல்பாட்டாளர்களை பொலிஸார் கைது செய்ததோடு தமிழர் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுத்த சம்பவங்களும் உள்ளன. தமிழர்களுக்கு எதிராக நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம், அரசாங்கத்தின் உறுதிமொழிகளை மீறி நடைமுறையில் உள்ளது.

இதனிடையே, யாழ்ப்பாணத்தில், மாவீரர் நாள் நிகழ்வின் போது, விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்தை முகநூலில் பதிவேற்றியதற்காக இளைஞர் ஒருவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். இதே போன்று ஊடகவியலாளர்களில் குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்குதல்கள் மிரட்டல்களையும் எதிர்கொண்டுள்ளனர். இன்னும் சிலர் கண்காணிப்புக்குள் உள்ளனர். (ஐ)

# மந்திரிமனையை பாதுகாக்க கோரி இன்று கவனவீர்ப்பு போராட்டம்!

யாழ்ப்பாணம், செப். 22

யாழ்ப்பாணத்தின் மரபுரிமை சின்னமான மந்திரிமனையை பாதுகாக்கவும் அதனை புனரமைக்க அனுமதிக்குமாறும் வலியுறுத்தியும் இன்றைய தினம் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள மந்திரிமனையின் முன்பாக இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இந்தப் போராட்டம் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அண்மையில் பெய்த மழையால் மந்திரிமனையின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இந்த நிலையில், அந்தக் காணியின் உரிமையாளர் அதனை புனரமைக்கத் தடையாக செயல்பட்டு வருகிறார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை தெரிந்ததே. (ஐ)

## வல்லிபுர...

கொடியேற்றி வைத்தனர்.

நேற்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழாவில் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குருக்கட்டு விநாயகர் தரிசனம் மறுநாள் வெண்ணெய் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து, ஒக்ரோபர் 02ஆம் திகதி வியாழக்கிழமை கம்சன் போர், மறுநாள் வெள்ளிக்கிழமை வேட்டை திருவிழா அடுத்தநாள் சனிக்கிழமை சப்பை ரதத் திருவிழா, 5ஆம் திகதி ஞாயிறுக்கிழமை தேர்த் திருவிழா மறுநாள் திங்கட்கிழமை சமுத்திர தீர்த்த திருவிழா அடுத்தநாள் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பட்டுத்தீர்த்த திருவிழா நடைபெறவுள்ளன.

திருவிழாவையொட்டி விசேட சுகாதார, போக்குவரத்து, பாதுகாப்பு வசதிகள் வழமைபோன்று முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

## போர்க்குற்றம்...

உதவியைப் பெறும் செயல்பாடு அமையும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான புதிய தீர்மானம் மீதான வாக்கெடுப்புக்குத் திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால், வரைவுத் தீர்மானத்தில் திருத்தங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வரைவுத் தீர்மானத்தில் பெரிய திருத்தங்கள் எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை. எனினும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கை மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பில் இருக்கும் என்றும் அமைச்சர் ஹேரத் தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், இலங்கையின் பொறுப்புக்கூறல் காலமும் இரண்டு வருடங்களால் நீடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக, இலங்கை மீதான மனித உரிமைகள் பேரவையின் அதிகாரத்தை நீடிக்கும் வரைவுத் தீர்மானத்தை மனித உரிமைகள் பேரவையிடமும் அதன் முக்கிய ஆதரவாளர்களான இங்கிலாந்து, கனடா, மலாவி, மொண்டினீக்ரோ மற்றும் வடக்கு மெசிடோனியா ஆகிய நாடுகள் கடந்த வாரம் ஒப்படைத்தன.

இலங்கையில் பல புதைகுழி தளங்களை அடையாளம் காணப்படுவது போதுமான வளங்களுடன் தொடர்ச்சியான பணிகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பணிமனையின் சுயாதீனமான மற்றும் பயனுள்ள செயல்பாட்டின் முக்கியத் துவம் என்பவற்றை இந்தத் தீர்மானம் வலியுறுத்துகிறது.

இதனிடையே, பயங்கரவாதத் தடைச் சட்டம் இந்த ஆண்டுக்குள் இரத்து செய்யப்படும். அதற்கு பதிலாகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இந்த ஆண்டுக்குள் பாராளு மன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

## போதைக்கு...

இளைஞரே கோப்பாய் பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மின்சார....

செலவு ஏற்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது மின்சார சபையின் நிதிச்செலவுகள் 248 கோடி ரூபாய் அதிகரித்துள்தாகக் கூறப்படுகிறது.

இதற்கமைய பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தற்போது மக்கள் கருத்துகளைக் கோரி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியாவை...

உறுப்பினர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர். "மாகாண சபையின் கடந்த கால அனுபவம் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்" என்ற கருப்பொருளில் "வன் டெக்ஸ்ட்" நிறுவனத்தின் அனுசரணையில் நேற்று நடந்த கலந்துரை யாடலில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

யாழ். நகர விடுதி ஒன்றில் நடந்த இந்த நிகழ்வின் இறுதியில் புளொட் கட்சியின் பா. கஜதீபன், ரெலோவின் சபா. குகதாஸ், தமிழ் அரசு கட்சியின் இ. ஆனல்ட், ஈ. பி. ஆர். எல். எவ்வின் க. சர்வேஸ்வரன், ஈ. பி. டி. பியின் தவநாதன் ஆகியோர் கூட்டாக ஊடக சந்திப்பை நடத்தினர். இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் முழுமையான தீர்வாக மாகாண சபை முறைமை இல்லாதுவிடினும் அதுவே, தீர்வின் ஆரம்பமாக இருக்கின்றது. இதனால்தான் அரசாங்கங்கள் இந்தத் தேர்தலை நடத்த அக்கறை காட்டுவதில்லை. அதையே இந்த அரசாங்கமும் செய்கிறது.

இதேநேரம் தமிழ் மக்களுக்கு இது, அவர்களின் இருப்புடன் தொடர்புடைய ஒன்று. ஆனால், ஏனைய மாகாணங்களுக்கு அது அவசியமற்றதாக இருக்கலாம். தேர்தலை நடத்த அரசாங்கம் விரும்பாவிட்டால் குறைந்தபட்சம் இதை வடக்கு - கிழக்கிலாவது நடத்த வேண்டும். இதை அனைத்து கட்சிகளும் ஒருமித்த குரலில் வலியுறுத்துகிறோம்.

சர்வதேச சமூகம் இன்று எமது அரசியல் உரிமை குறித்து பேசுகிறது. இந்திய அரசும் ஐ. நாவில் வலியுறுத்துகிறது. குறிப்பாக, ஐ. நாவின் தற்காலிக வரைபில், மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அதிகாரங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனால், இந்த விடயம் தற்போது சர்வதேச குரலாக இருக்கிறது. எனவே, மாகாண சபைகள் முறைமை நீக்கப்படாது. நீக்கப்பட்டால் இந்தியாவுடன் இலங்கை நேரடியாக மோதும் ஒரு சம்பவமாக உருவாகிவிடும். அதனால் மாகாண சபை முறைமையை நீக்குவதற்கு அரசாங்கம் முயலாது.

இதேநேரம், புதிய அரசமைப்பின் மூலம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு முழுமையாகக் கிடைக்குமாக இருந்தால் மட்டுமே மாகாண சபை முறைமையை இல்லாது செய்யும் சாத்தியம் ஏற்படும் - என்றும் அவர்கள் கூறினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தட்டுப்பாடான மருந்துகள் நவம்பரின் பின் கிடைக்கும்

## சுகாதார அமைச்சர் நளிந்த



கொழும்பு, செப். 22

நாட்டில் தற்போது தட்டுப்பாடு கிடைக்கும் மருந்துகள் எதிர்வரும் நவம்பர் மாதத்தின் பின்னர் கிடைக்கும். தற்போதைய மருந்து தட்டுப்பாட்டுக்கு நிதிப் பிரச்னை காரணமல்ல என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொள்முதலில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான கொள்முதல் செயல்முறைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துகள் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு பின்னர் வரவுள்ளன - என்றார்.

மேலும், சில மருந்துகள் தனியார் சந்தையில் கிடைக்காது, திறந்தவெளியில் கிடைக்காது, சந்தையிலும் கிடைக்காது, மருந்தகங்களில் கிடைக்காது. இதுபோன்ற பல சிக்கல்கள் உள்ளன. மருந்து பதிவின் போது வரம்பற்ற விலைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் பதிவை நாங்கள் அனுமதிப்பதில்லை. தெற்காசிய நாடுகளில் தற்போதைய சந்தை நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட விலை வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை விரும்பாதவர்கள் மருந்துகளை விநியோகிக்க மாட்டார்கள். கேள்விகோரல் செய்யும் பொறுப்பை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடம் வழங்கியுள்ளோம். சுமார் 80-85 வீதமான பணி நிறைவு பெற்றுள்ளது - என்றார். (ஐ)

# பட்டினி இல்லாதவாறு ஆட்சி செய்கின்றோம்

ஜே. வி. பி. பொதுச் செயலர்

கொழும்பு, செப். 22

எவரும் பட்டினி என்று கேள்விப்படாத வகையில் நாட்டில் ஆட்சி நடக்கிறது என்று ஆளும் தரப்பின் தாய்க் கட்சியான ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார் .

மக்களுக்கு ஏற்பட்டிருந்த பசியை போக்கியுள்ளோம். வங்குரோத்து அடைந்திருந்த நாட்டையே நாம் பொறுப்பேற்றோம். சில இடங்களில் மக்களுக்கு உண்பதற்கு உணவு இருக்கவில்லை. சிலர் பாகற்காயை சாப்பிட்டு உயிர் வாழ்ந்தனர் என்று சில பகுதிகளில் இருந்து செய்திகள் கிடைத்திருந்தன.

ஆட்சி பொறுப்பை ஏற்றுஓராண்டு காலத்தில் இந்த நிலையை மாற்றியுள்ளோம். எவரும் பட்டினியுடன் இருப்பதாக தற்போது தகவல்கள் வருவதில்லை. நாட்டில் பொருட்களின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்தியுள்ளோம். கடந்த காலங்களில் இருந்ததை விடவும் தற்போது பொருட்களின் விலைகள் குறைந்துள்ளது - என்றார். (ஐ)

# உயிருடன் இருக்கும்வரை அரசியலில் ஈடுபடுவேன்!

தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, செப். 22

உயிருடன் இருக்கும் வரையில் அரசியலுக்கு விடை கொடுக்கப் போவதில்லை என்று முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "எனது மூச்சுக்காற்று இருக்கும் வரையில் அரசியலுக்கு விடை கொடுக்கப் போவதில்லை. உலகின் எல்லா இடங்களிலும் வாழ்நாள் அரசியல் என்பது ஒரு வழமையான மரபு.

கட்சித் தலைவர்கள் அடுத்த திட்டங்களை வகுப்பார்கள். அதுவரை யாரும் பதற்றம் அடைய தேவை இல்லை. இந்த அரசாங்கம் செல்லும் பாதை பிழையானது. இதனால் மக்கள் கலக்கமடைந்துள்ளனர்- என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# "ஒரு கட்சி சிந்தனையை தோற்கடிக்க இணைவோம்"

கொழும்பு, செப். 22

ஒரு கட்சி மட்டுமே சகல அதிகாரத்தையும் கைப்பற்ற வேண்டும் என கருதும் ஜனநாயக விரோத ஆட்சி சிந்தனையை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் உள்ளூராட்சி மன்றங்களின் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை நேற்று சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தற்போதைய அரசாங்கம் மிகவும் திட்ட மிட்ட வகையில், நாட்டில் ஒரு கட்சி மட்டுமே அரசாங்கத்தை அமைத்து ஆட்சியை நடத்தும் எண்ணக்கருவை முன்னெடுத்து வருகின்றது.

மரணாதார சங்கம், விவசாயிகள் சங்கம், மீனவர் சங்கம், இளைஞர் கழகம் முதல் மதஸ்தலங்களின் பரிபாலன சபை வரை அனைத்தையும் அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் எடுக்க முயற்சித்து வருகின்றனர்.

சகல சமூக அமைப்புகளினதும் அதிகாரத்தை, கட்டுப்பாட்டை வலுக்கட்டாயமாக கைப்பற்ற முயற்சித்து வருகின்றனர். மக்களின் பாதுகாப்புக்காக சிவில் பாதுகாப்பு குழுக்கள் நிறுவப்பட்டதுடன் அதில் சகல கட்சிகளினது உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்து பணியாற்றினர்.

இன்று சிவில் பாதுகாப்பு குழுவுக்கான நியமனப் பட்டியல்களை ஜே. வி. பி. பாராளுமன்ற உறுப்பினர்களே நியமிக்கின்றனர். கிராமத்தில் நல்லதோர் அமைப்பு இருந்தால் இதுபோன்ற நியாயமற்ற நியமனங்களைத் தடுக்க முடியும்.

ஒவ்வொரு கட்சிக்கும் நியாயமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்ட இடத்தில் அரசாங்கத்தின் சூட்சும முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன - என்றார். (ஐ)

# கலந்துரையாடலை புறக்கணித்த மின்சார சபை தொழிற்சங்கங்கள்

கொழும்பு, செப். 22

மின்சார சபை பிரதானிகளுடனான சந்திப்பு இடத்திலிருந்து மின்சார சபை தொழிற்சங்கங்கத்தினர் வெளிநடப்பு செய்துள்ளனர்.

இலங்கை மின்சார சபை தலைமையகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் 25 அமைச்சுகளின் செயலாளர்களும் 3 தொழிற்சங்க பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இதன்போது, இலங்கை மின்சார சபை மறுசீரமைப்புக்கு பொறுப்பான பணிப்பாளர் பங்கேற்றிருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே மின்சார தொழிற்சங்க உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இதேநேரம், மின்சார சபை தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் போராட்டத்தின் அடுத்த கட்டம் தொடர்பில் நாளை மறுதினம் புதன்கிழமை தீர்மானிக்கப்படும் என்று அந்த சங்கங்கள் அறிவித்துள்ளன. (ஐ)

# பாடசாலை சேவைகளுக்கு பெண் சாரதி, நடத்துநர்கள்

கொழும்பு, செப். 22

இலங்கை போக்குவரத்து சபையில் பெண் ஊழியர்கள் உட்பட 450 சாரதிகள் மற்றும் 300 நடத்துநர்களை நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதற்கான நேர்காணல்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் கூறினார்.

மேலும், பெண்களை பணியமர்த்த முன்பு அவர்களுக்கு போதுமான பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகளை உறுதி செய்ய வேண்டும்.

இந்நிலையில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலை பேருந்துகளில் பெண் ஊழியர்களை பணியமர்த்துவதே ஆரம்ப திட்டம். இது கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படும் - என்றார். (ஐ)

# அநுரவின் ஆட்சி காலத்தில் 104 கோடி டொலர் முதலீடு!

கொழும்பு, செப். 22

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அரச நிர்வாகத்தை பொறுப்பேற்ற காலம் முதல் நேரடி அந்நிய முதலீடாக 104.8 கோடி அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது என்று இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

துறைமுகங்கள் தொடர்பான நிர்மாணப்பணிகள், சுற்றுலாத்துறை, ரயர் தொழில் போன்றவற்றின் மூலமே பெரும் முதலீடுகள் கிடைத்தன. இவ்வாறு கிடைத்தவற்றில் 65 சதவீதமானவை சர்வதேச ரீதியான முதலீட்டாளர்களால் வழங்கப்பட்டது.

இது தவிர, ஜனாதிபதி பதவி ஏற்ற காலத்தில் இருந்து 152 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தங்காலையில் சிக்கிய இரசாயனம் சோதனை அறிக்கை அடுத்தவாரம்!

கொழும்பு, செப். 22

தங்காலையில் காணி ஒன்றில் கண்டறியப்பட்ட இரசாயனப் பொருட்கள் குறித்த சோதனை அறிக்கை அடுத்த வாரம் பொலிஸாரிடம் கையளிக்கப்படும் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.இந்த இரசாயனப் பொருட்கள் குறித்த சோதனை நடவடிக்கை இறுதிக்கட்டத்தில் உள்ளன என்று அந்த சபையின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட குற்றக் கும்பலின் உறுப்பினர்களால் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில், மித்தெனிய, தங்காலை, கந்தானையில் இரசாயனப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

மித்தெனியவில் கண்டுபிடிக்கப்பட்ட இரசாயன பொருட்களின் 20 மாதிரிகளில் 17இல் மெத்தம்பேட்டமைன் இரசாயனம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இது ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போதையில் வாகனம் செலுத்துவதை தடுக்க புதிய விதிமுறைகள் அறிமுகம்!

கொழும்பு, செப். 22

போதையில் வாகனம் ஓட்டுவதை தடுக்க அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி, போதைப்பொருள் பாவித்தனர் என்று சந்தேகிக்கப்படும் நபர்களை சோதனையிடவும் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவும் பொலிஸ் மா அதிபர், மருத்துவ அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி கடந்த 4ஆம் திகதி வெளியிடப்பட்டது.

புதிய விதிகளின் கீழ், வாகனத்தை ஓட்டும் ஒருவர், போதைப்பொருள் உட்கொண்டதாக "நியாயமான சந்தேகத்தின்" அடிப்படையில் ஒரு பொலிஸ் அதிகாரி செயல்படலாம்.

அசாதாரண நடத்தை, பேச்சு அல்லது இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள், சமநிலை இழப்பு, அசாதாரண கண் நிலை அல்லது ஓர் ஓட்டுநரின் உடையின் தோற்றம் போன்றவற்றிலிருந்து இந்த சந்தேகம் எழலாம்.

அத்துடன், முறைப்பாடுகளின் அடிப்படையில் பொலிஸார் ஓட்டுநர்களை சோதனைகளுக்கு உட்படுத்தலாம். அல்லது பொலிஸ் மாஅதிபரால் அங்கீகரிக்கப்பட்ட சாதனங்களை பயன்படுத்தி முதற்கட்ட உமிழ்நீர் பரிசோதனையை நடத்தலாம்.

இந்நிலையில், சந்தேகத்துக்குரிய வாகன ஓட்டிகள் அத்தகைய சோதனைக்கு இணங்கக் கடமைப்பட்டுள்ளனர். இதேசமயம், உமிழ்நீர் பரிசோதனைகள் விவேகத்துடன் நடத்தப்படுவதை உறுதிசெய்யுமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதிய விதிகளின்படி, மருத்துவ அதிகாரிகள் தங்கள் பரிசோதனையின் ஒரு பகுதியாக இரத்தம், சிறுநீர், உமிழ்நீர் அல்லது பிற உடல் திரவங்களின் மாதிரிகளை கோருவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறார்கள். அத்துடன், அத்தகைய மாதிரிகளை வழங்கத் தவறும் வாகன ஓட்டுநர்களின் செயல்பாடு, மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகக் கருதப்படும் என்றும் புதிய விதி கூறுகிறது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org